
## திராவிடத்தால் வாழ்கிறோம்

801

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## '100 ரூபாய்க்கு திருக்குறள் கலைஞர் உரை!'



புலவர்களிடத்தில் முடங்கிக் கிடந்த திருக்குறளை, மக்கள்மயப்படுத்தியது திராவிட இயக்கம். திருக்குறளில் இருந்த அறநெறிக் கருத்துக்கள் யாவும் சமயச்சார்பற்ற தாகவும், சமூக ஒழுக்கத்திற்கானதாகவும் இருந்ததால், அதை மலிவு விலைக்கு அச்சிட்டுப் பரப்பினார் பெரியார். பல்லாயிரக்கணக்கில் அச்சடித்து, 6 அணா விலைக்கு வெளியூர்களுக்கு அனுப்பிவைத்து விட்டு, அடக்க விலை 5 அணா மட்டுமே ஆனதால், மறுநாளே, 'முகவர்கள் தயவு செய்து ஐந்து அணாவுக்கே விற்குமாறு கேட்டுக் கொள்கிறோம். வாங்குபவர்களும் ஐந்து அணா என்று கேட்டு வாங்குமாறும் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று அறிக்கை விடுத்தார் பெரியார்.

காரணம், திருக்குறள் மக்கள் மத்தியில் சென்று சேர வேண்டும் என்ற ஒற்றை நோக்கம். வள்ளுவர் கோட்டத்திற்கு வித்திட்டது, குமரி முனையிலேயே வள்ளுவரை வானுயர நிறுத்தியது, பேருந்துகளில் திருக்குறளை விளக்கத்துடன் இடம்பெறச் செய்தது என கலைஞரும் தனது ஆட்சிக்காலத்தில் எண்ணற்ற சாதனைகளை, திட்டங்களைத் தந்திருந்தாலும், திருக்குறளைப் பரப்ப கலைஞர் ஆற்றிய இப்பணிகளை விட முக்கியமான பணி வேறு எதுவென்றால், கடுமையான அரசியல் பணிகளுக்கு மத்தியிலும், திருக்குறளுக்கு அவர் எழுதிய விளக்கவுரையே.

ஏராளமானோர் திருக்குறளுக்கு விளக்கவுரை எழுதியிருந்தாலும், கலைஞர் எழுதிய விளக்கவுரை மட்டும்தான், உலகப் பொதுமறைக்கு எளிமையான விளக்கத்தைக் கொடுத்தது. பகுத்தறிவுப் பார்வையிலும் இருக்கிறது. அத்தகைய 'திருக்குறள் கலைஞர் உரை' நூலை மலிவு விலை விற்பனையில் 100 ரூபாய்க்கு அச்சடித்து விற்பனைக்குக் கொண்டு வந்துள்ளது 'திரவிடியன் ஸ்டாக்' பதிப்பகம். பள்ளிக்குழந்தைகள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை அனைவருக்கும் பயன்படும் வகையில் வெளிவந்துள்ளது 'திருக்குறள் கலைஞர் உரை'மக்கள் பதிப்பு.

வாங்கிப் படியுங்கள், பயன்பெறுங்கள், பரப்புங்கள்...

நூலைப் பெற: 90927-87854

## ஃப்ளாஷ்பேக்



### பச்சையப்பன் கல்லூரி மாணவராக அண்ணா!



அ.இராமச்சந்திரன்

பேரறிஞர் அண்ணா அவர்களும் என்னுடைய தாத்தா டி.எம்.கிருஷ்ணசாமி அவர்களும், பச்சையப்பன் கல்லூரியில் ஒன்றாக படித்தவர்கள். அவர்கள் இருவரும் இருக்கும் கல்லூரிக் குழு புகைப்படம் ஒன்றை அண்மையில் எங்கள் வீட்டில் கண்டெடுத்தேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் மேலிருந்து முதல் வரிசையில் மூன்றாவது நபராக இருக்கிறார். என்னுடைய தாத்தா கிருஷ்ணசாமி அவர்கள் மூன்றாவது வரிசையில் இடமிருந்து நான்காவது நபராக இருக்கிறார். மிகவும் அரிய புகைப்படம் இது.

– **அ.இராமச்சந்திரன்,**
**பொறியாளர் பொறுப்பு (ஓய்வு),**
**இந்திய வானியற்பியல் நிறுவனம்,**
**திருப்பத்தூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அலகாபாத்தில் கலைஞர்

1973-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் உத்தரப் பிரதேச மாநிலம் அலகாபாத் நகரில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டில் கலந்துகொண்டார் கலைஞர். பொதுக்கூட்டம் நடைபெறு வதாக இருந்த மைதானம் உள்பட நகரின் பல பகுதிகளில் 'இராமனின் விரோதி' என இந்தி எழுத்துகளில் கலைஞரை எதிர்த்து போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. 'இராமனுக்கு விரோதி நான் அல்ல; இராவணனே' என தனது உரையில் பதில் அளித்தார் கலைஞர்.

## திராவிட மாடல் அரசு

**ர.பிரகாசு**

115

**'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் ஆகிய 5 வகை நில அமைப்புகளை விவரிக்கும் வகையில், அந்த நிலப்பகுதிகளுக்கான அடையாளங்கள் அமைக்கப்பட்டு, நூற்றுக்கணக்கான பறவைகள் விடப்பட்டுள்ளன. காலை, 9 மணி முதல் மாலை 5 மணி வரை பூங்கா செயல்படுகிறது. 'நமக்கு நாமே' திட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள இப்பூங்காவை மாவட்ட நலப் பணிகள் நிதிக் குழு பராமரிக்கிறது.

### அரிய பறவைகளின் அணிவகுப்பு!

உள்ளே நுழைந்ததும் புறாக்களின் அணிவகுப்பைத்தான் பார்வையாளர்கள் முதலில் காண்கின்றனர். 'சுருள் ரெக்கை', 'பொமேரியன் பௌட்டர்', 'கேடய பௌட்டர்', 'கிளி மூக்கு', 'வைரப் புறா', 'நீண்ட முகம் டம்ளர்', 'கட்ட வால்', 'ஓரியண்டல் பிரில்', 'பூ ரெக்கை', 'மூஞ்சி மூடி, 'போண்டா' புறா', 'சின்ன மூஞ்சி', 'அழகு ஹோமர்', 'கழுத்தசைப்பான், 'கேரியர் புறா, 'மாக்பை பௌட்டர்' என அரிய வகை புறா இனங்களை, ஆச்சர்யத்துடன் பார்க்கின்றனர் பார்வையாளர்கள்.

குளிரூட்டப்பட்ட இந்த மீன்கள் அருங்காட்சியகம், கடலின் அடிப்பகுதியில், இருந்து மீன்களைப் பார்ப்பதுபோல தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கைக்குழந்தையின் சுண்டு விரல் நீளத்தில் தொடங்கி, 5 கிலோ எடைகொண்ட பெரிய மீன்கள் வரை இருப்பது குழந்தைகளைப் பரவசப்படுத்துகிறது.

### பறவைகளோடு விளையாடலாம்!

பொதுவாக, உயிரியல் பூங்காக்களில் கண்ணாடிக் கூண்டுக்குள்ளோ அல்லது கம்பித் தடுப்புகளுக்கு உள்ளேதான் விலங்குகளும், பறவைகளும் அடைக்கப்பட்டிருக்கும். எட்ட நின்று பார்த்து வருவதுதான் பார்வையாளர் களுக்கு ஒரே வாய்ப்பு. உணவுப் பொருட்கள் வழங்குவதும் தடை செய்யப்பட்டிருக்கும். ஆனால், திருச்சி பறவைகள் பூங்கா முற்றிலும் வித்தியாசமான அனுபவத்தைத் தரும்.

பறவைகள் வசிக்கும் 30 அடி உயர கூண்டுக்குள் பொதுமக்கள் அனுமதிக்கப்படு கின்றனர். உள்ளே செல்லும் அனைவருக்கும் சூரிய காந்தி விதைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. அந்த விதைகளை பறவைகளுக்கு உணவாகத் தரலாம். அங்குள்ள 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல வகையான வண்ண பறவைகள் பறந்து வந்து விளையாடுவதும், தோள்களிலும் கைகளிலும் ஏறி அமர்வதும் பார்வையாளர்களைக் குதூகலிக்கச் செய்கிறது. குறுக்கும் நெடுக்குமாக பறந்துகொண்டே இருக்கும் வண்ணப் பறவைகள் குழந்தைகளின் கண்களைக் கவருகிறது.

### மற்ற சிறப்புகள்

பூங்காவில் '7-டி மினி திரையரங்கு' ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு திரையிடப்படும் படங்கள் முப்பரிமாணக் காட்சிகளாக அருகில் தெரிவதுடன், காட்சிகளின் அமைப்பிற்கு ஏற்பத் தங்களைச் சுற்றி ஈரமாக உணர்வது, திரையில் காணும் மலர்களின் நறுமணத்தை உணர்வது போன்ற சிறப்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் 50 பேர் அமர்ந்து இதனைப் பார்வையிடலாம்.

அதேபோல குழந்தைகளுக்கான விளை யாட்டுச் சாதனங்களும் உள்ளன. அதே இடத்தில் பெரியவர்களுக்கு அதிநவீன நாற்காலி மசாஜ் மற்றும் மீன் ஸ்பா உள்ளன. பறவைகளுக்கான இனப்பெருக்க மையமும் இங்கு உள்ளது. பூங்காவில் பறவைகளின் எண்ணிக்கை குறிப்பிட்ட அளவைத் தாண்டி னால், அவை பொதுமக்களுக்கு விற்கப்படும். பொதுமக்களும் இப்பூங்காவுக்கு பறவைகளை வழங்கலாம். பார்வையாளர்கள் வசதிக்காக உணவகம் அமைக்கப்பட்டுள்ளது. நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.200, சிறியவர்களுக்கு ரூ.150 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.


குடும்பத்தோடு இன்பச் சுற்றுலா செல்லவும், அங்கே குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்யவும் ஓர் சிறந்த இடம், திருச்சி பறவைகள் பூங்கா. திறக்கப்பட்ட நாள் முதல் தினம்தோறும் படையெடுக்கும் மக்கள் கூட்டமே 'பறவைகள் பூங்கா' தந்துகொண்டிருக்கும் பரவசத்திற்கு சான்றாக உள்ளன.

...சாதனை தொடரும்













# பரவசமூட்டும் பறவைகள் பூங்கா!

தமிழ்நாட்டின் மையமான திருச்சி மாநகருக்கு சமயபுரம் மாரியம்மன் கோயில், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில், மேலப்பலூர் புனித மரியன்னை பேராலயம், நாதிர்ஷா தர்கா என வழிபாட்டுத் தலங்கள் ஏராளம் இருந்தாலும், முக்கொம்பு அணைக்கட்டு, ஸ்ரீரங்கம் வண்ணத்துப்பூச்சிப் பூங்கா என பொழுதுபோக்குத் தலங்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் உள்ளன. 70 கிலோ மீட்டருக்கு மேல் பயணித்தால்தான் பச்சைமலை, புளியஞ்சோலை உள்ளிட்ட சுற்றுலாத்தலங்களை காண முடியும்.

'இவற்றைத் தாண்டிய வேறு பொழுதுபோக்கு அம்சங்கள், திருச்சி மாநகரில் இல்லையே' என்ற மக்களின் ஏக்கத்தைத் தவிர்க்கும் வகையில், நல்லூர் அருகே கம்பரசம்பேட்டை ஊராட்சியில் காண்போர் கண்களைக் கவரும் விதமாக 'பறவைகள் பூங்கா' அமைத்துள்ளது திராவிட மாடல் அரசு.

இந்தியாவிலேயே மிகப்பெரிய பறவைகள் கூடமான இதனை, 09.02.2025 அன்று திருச்சி மாவட்டத்திற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்து, மக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணித்தார். திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் இந்தப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது

### கண்ணைக் கவரும் பூங்கா!

குடமுருட்டி அய்யாளம்மன் படித்துறையின் அருகே 4.5 ஏக்கர் நிலப்பரப்பில், 60 ஆயிரம் சதுர அடியில், ரூ.18.63 கோடி செலவில் மிகப் பிரமாண்டமாக இந்தப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. உள்ளே நுழையும்போதே, அதன் அழகான முகப்புப் பகுதி, பார்வை யாளர்களைக் கவர்ந்து இழுக்கிறது. அடுத்து, சிறிய நீருற்று செல்ஃபி பாயிண்ட் போல வரவேற்கிறது.




அதைக்கடந்து சென்றால், பல்வேறு கோழியினங்கள், அழகழகான நெருப்புக் கோழிகள், ஈமுக் கோழிகள் தனித்தனியாகக் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளன. பல வகை வாத்துகள், பல வகைக் கிளிகள், LIGO வகைக் குருவிகள் தனித்தனியே காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. தத்திச் செல்லும் குட்டி முயல்கள் முதல் 10 கிலோ எடையுள்ள பெரிய முயல்கள் வரை, முயல்களில் இத்தனை வகையான ஆச்சர்யம் தரும் அளவுக்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

### மீன்கள் அருங்காட்சியகம்

அதைத் தொடர்ந்து, ஐம்பதுக்கும் மேற்பட்ட மீன் வகைகளைக் கொண்ட அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. முழுமையாகக் குளிரூட்டப்பட்ட...

**"குடும்பத்தோடு இன்பச் சுற்றுலா செல்லவும், அங்கே குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்யவும் ஓர் சிறந்த இடம், திருச்சி பறவைகள் பூங்கா."**

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131